IHP
INSTITUTE FOR HEALTH POLICY

**72, Park Street, Colombo 2, Sri Lanka**
Tel: +94 11 231 4041/2/3/5 Fax: +94 11 231 4040
e-mail: info@ihp.lk web: www.ihp.lk twitter: @ihplk

# PRESS RELEASE

**திகதி வரை தடையாணை**

திகதி : 29 February 2024
நேரம் : 11:59 PM Sri Lanka Time

**மேலும் தகவல்களுக்கு அணுகவும்**

செயலாளர்/நிர்வாகி
மின்னஞ்சல்: info 'at' ihp.lk


**பிரதான ஆராய்ச்சியாளருடன் தொடர்புகொள்ள**


மருத்துவர். ரவி ரன்னன்-எலிய
மின்னஞ்சல் : ravi `at' ihp.lk Twitter: @ravirannaneliya

# ஜனவரி 2024 ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் விருப்பத்தில் அ கு திஸாநாயக (50%) முன்னணியை தக்கவைத்துள்ளார்

## *ஜனவரி 2024 IHP MRP ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மானங்கள் புதுபிப்பு*

IHP-ன் ஜனாதிபதி தேர்தல் வாக்காளர் தீர்மானம் பற்றிய இலங்கை கருத்துக்கணிப்பு ஆய்வின்(SLOTS) ஜனவரி 2024ற்கான தற்காலிக MRP மதிப்பீடுகள் என்.பி.பி./ஜே.வி.பி. தலைவர் அ. கு. திஸாநாயக வயதுவந்தோர் அனைவருக்கும் மத்தியில் 50%(முந்தைய மாதத்தைவிட -1) உடன் இருப்பதையும், எஸ்.ஜே.பி. தலைவர் சஜித் பிரேமதாச 36% (+2) உடன் பின்தொடர்வதையும், மற்றும் ஜனா.ரணில் விக்ரமசிங்க மற்றும் யாராகிலும் ஒரு எஸ்.எல்.பி.பி. வேட்பாளர் இருவரும் 7%த்துடன் இருப்பதையும் காட்டுகின்றன.




இந்த மதிப்பீடுகள், மாதாந்திர மாற்றங்களை சீராக்குதல் மற்றும் மாதிரி இரைச்சல் காரணமாக ஏற்படக்கூடிய மாதாந்திர ஏற்ற இறக்கங்களைக் குறைக்கும் நோக்கத்தோடு, ஜன. 2024ல் முக்கிய திருத்தம் செய்யப்பட்ட IHP SLOTS மல்டிலெவெல் ரிக்ரெஷன் மற்றும் போஸ்ட் ஸ்ட்ராடிபிகேசன்(Multilevel Regression and Poststratification)(MRP) என்னும் மாதிரியை அடிப்படையாகக்கொண்டு கணிக்கப்பட்டவை. இந்தப் புதுப்பிப்பு, வயதுவந்தவர்கள் அனைவருக்கும் பொருந்தும், மேலும் ஜன. 2024ல் நடத்தப்பட்ட 506 நேர்காணல்கள் உள்பட, அக். 2021 முதல் பிப். 26 2024 வரை நடத்தப்பட்ட 15,590 நேர்கானல்களின் தரவினைக்கொண்டு திருத்தப்பட்ட MRP மாதிரியை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

IHPன் SLOTS MRP முறையானது, பதிலளிப்பவர்களின் பல்வேறு வகையான குணாதிசயங்களுக்கும் அவர்களின் கருத்துக்களுக்கும் – இங்கு, "இன்று ஜனாதிபதி தேர்தல் நடந்தால் நீங்கள் எந்த கட்சிக்கு வாக்களிப்பீர்கள்?" என்னும் கருத்துக்கும் – இடையேயான தொடர்பை பல அடுக்கு(multilevel model) புள்ளியியல் மாதிரியின் மூலம் முதலில் மதிப்பிடுகிறது. அதன் பின் தேசிய மக்கள்தொகைக்கு ஏற்ப அளவீடு செய்யப்பட்ட ஒரு பாரிய தரவு கோப்பைப் பயன்படுத்தி, ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு கட்சிகளுக்கு அவர்கள்

வாக்களிக்ககூடிய நிகழ்தகவினைப்பற்றி பல அடுக்கு மாதிரி(multilevel model) கூறுவதை வைத்து('post-stratification'), அக். 2021 முதல் ஒவ்வொரு மாதமும் வாக்காளர் தீர்மானத்தை கணிக்கிறது. மாதிரியில் உள்ள நிச்சயமற்ற தன்மைகளை பிரதிபலிக்கவும், பிழை விளிம்புகளைப் பெறவும் பல அடுக்கு மாதிரி(multilevel model) 100 முறை மதிப்பிடப்பட்டது.

## தொடர்புடைய அறிக்கைகள்


Institute for Health Policy, June 2023, "Pres. Ranil Wickremesinghe & SLPP continue to gain support in May. IHP Presidential Election Voting Intentions Update May 2023".
*Available at:* [https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease202306302.pdf](https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease202306302.pdf)

Institute for Health Policy, July 2023, "Little change in Presidential voting intention in June 2023: AKD 40%, Sajith 35%, Ranil 15%. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update June 2023".
*Available at:* [https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230728.pdf](https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230728.pdf)

Institute for Health Policy, August 2023, "Pres. Ranil Wickremesinghe continues to gain support in a potential Presidential poll. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update July 2023".
*Available at:* [https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230822.pdf](https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230822.pdf)

Institute for Health Policy, September 2023, "AK Dissanayake (38) and Sajith Premadasa (35) continue to lead in Presidential Election voting preferences. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update August 2023".
*Available at:* [https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230926.pdf](https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20230926.pdf)

Institute for Health Policy, November 2023, "AK Dissanayake consolidates lead in Presidential Election voting intent. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update October 2023".
*Available at:* [https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20231124.pdf](https://ihp.lk/news/pres_doc/IHPPressRelease20231124.pdf)

Institute for Health Policy, January 2024, "AK Dissanayake leads in Presidential Election voting preferences on 50%, with Sajith Premadasa on 33% of all adults in December. IHP/SLOTS MRP Presidential Election Voting Intention Update December 2023".
*Available at:*
[https://www.ihp.lk/sites/default/files/press-release/IHPPressRelease20240130.pdf](https://www.ihp.lk/sites/default/files/press-release/IHPPressRelease20240130.pdf)


## IHP பற்றி

IHP கொழும்பு, இலங்கையில் உள்ள சுயாதீனமான மற்றும் கட்சிசார்பற்ற ஆய்வு மையம். SLOTS ஆய்வின் பிரதான ஆய்வாளர் மருத்துவர் ரவி ரன்னன்-எலிய ஆவார். இவர் பொது கருத்துக்கணிபுகளில் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயிற்சி பெற்றதோடு மூன்று தசாப்தங்களாக பல்வேறு ஆய்வுகளை நடத்திவருகிறார்.

**முறை**

முன்தேர்வு இல்லாமல் எழுமாற்றமாக தேர்ந்தெடுத்த கைப்பேசி எண்களின் மூலம் தொடர்புகொண்டு சேர்க்கப்பட்ட வயதுவந்தவர்களின் (18 வயதிற்கு மேற்பட்டவர்கள்) மாதிரியில் இருந்தும் மற்றும் எழுமாற்ற மாதிரி தெரிவு முறையின் மூலம் முறைப்படி தெரிவு செய்யப்பட்ட ஒர் தேசிய பதிலளிப்பவர் பேனலிலிருந்தும் நேர்காணல்களை SLOTS ஒருங்கிணைக்கிறது. குறிப்பிட்ட மாதத்தில் வாக்களிப்பை மதிப்பிட அனைத்து SLOTS நேர்காணல்களின் தரவினையும் முழுமையாக பயன்படுத்தி, வாக்களிப்பு தீர்மானத்தை Multilevel Regression மற்றும் Post-Stratification (MRP) தழுவிய முறை கொண்டு IHP மதிப்பீடு செய்கின்றது. உடன் தொடர்பு முறையின் நிச்சயமற்ற தன்மை மல்டிபல் இம்ப்யூடேஷன்(multiple imputation) என்னும் முறையின் மூலம் கருதப்படுகின்றது.

ஜனவரி 2024க்கான MRP மதிப்பீடுகள் ஜனவரி 2024 ல் நடத்தப்பட்ட 506 நேர்காணல்கள் மற்றும் அக்டோபர் 1 2021- பிப்ரவரி 26 2024 வரை நடத்தப்பட்ட 15,590 ஒட்டுமொத்த நேர்காணல்களை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டது. அ.கு.திஸாநாயக மற்றும் சஜித் பிரேமதாசவிற்கு பிழை விளிம்பு 2.5-3.0% எனவும், மேலும் ரணில் விக்ரமசிங்க மற்றும் மற்ற உத்தேச வேட்பாளர்களுக்கு 0.5–1.5% என்றும் மதிப்பிடப்பட்டது. தேசிய சனத்தொகையின் வயது, பாலினம், இனக்குழு, சமூகபொருளாதார நிலை, கல்வி, இடம், மற்றும் 2019 ஜனாதிபதி மற்றும் 2020 பொது தேர்தல் வாக்களிப்போடு மாதிரி பொருந்துமாறு அனைத்து மதிப்பீடுகளும் சரிசெய்யப்பட்டன.

**நிதியுதவி**

முன்பு SLOTS ஆய்விற்கு நீலன் திருச்செல்வம் அறக்கட்டளை, ஐக்கிய ராஜியத்தின் உடல்நலம் பராமரிப்பு ஆராய்ச்சிக்கான தேசிய நிறுவனம் (UK NIHR), ஆசியா மன்றம்(The Asia Foundation) மற்றும் ஏனையோர் நிதி வழங்கினர். தற்போதைய கள வேலைகளுக்கு நிதி IHPன் பொது நல ஆய்வு நிதி மற்றும் பிறரால் வழங்கப்படுகின்றது. ஆய்வின் வடிவமைப்பிலோ, பகுப்பாய்விலோ மற்றும் கண்டுபிடிப்புகளின் பொருள்விளக்கத்திலோ ஆதரவாளர்கள் பங்கு வகிக்கவில்லை. அதோடு ஆய்வின் கண்டுபிடிப்புகள் முந்தைய மற்றும் தற்போதைய நிதி வழங்குனர்களின் கருத்துகள் அல்ல. மேலும் விவரமான தரவுகள் மற்றும் முடிவுகளை பெற விரும்பும் நபர்கள் IHP உடன் தொடர்பு கொள்ளலாம்.